ராஜஸ்தான் மாநிலம் ஜெய்சல்மரில் நேற்று (21.12.2024) நடைபெற்ற ஜி.எஸ்.டி. கவுன்சிலின் 55ஆவது குழுக் கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் சார்பாக நிதித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டார். தமிழ்நாடு அரசின் வணிகவரி மற்றும் பதிவுத் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவநீத் மற்றும் வணிகவரித் துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சரக்குகள் - சேவைகள் வரிமன்றத்தின் 55வது கூட்டம்!

அமைச்சர் தங்கம் தென்னரசு தமிழ்நாடு அரசின் கருத்துகளை வலியுறுத்தினார்!

ஜெய்சால்மர், டிச.22- நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றத்தின் 55ஆவது கூட்டத்தில் கலந்துகொண்டு தமிழ்நாடு அரசின் கருத்துகளை வலியுறுத்தினார்.

நேற்று (21.12.2024), ஜெய்சால்மரில் நடைபெற்ற 55ஆவது சரக்குகள் மற்றும் சேவைகள் வரிமன்றக் கூட்டத்தில் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டார்.

புற்றுநோய் சிகிச்சைக்கான மருந்துகளின் அதிக விலையைக் கருத்தில் கொண்டு, புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ செலவுச்சுமையை குறைக்க மரபணு சிகிச்சை (CART செல் சிகிச்சை) மீதான சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிகிதத்தை 12% இல் இருந்து பூஜ்யமாகக் குறைப்பதற்கு அமைச்சர் ஆதரவு தெரிவித்தார்.

இணக்க முறையில் வரி செலுத்தும் வணிகர்கள் வணிக இடங்களின் வாடகை மீது எதிரிடை கட்டண முறையில் வரி செலுத்துவதில் இருந்து விலக்க ளிப்பதற்கு அமைச்சர் ஆதரவு தெரிவித்தார்.

பதிவு செய்யாத நபர்களுக்கு இணைய வழி சேவைகள் வழங்குகைகளின் சரியான மாநிலத்தை குறிப்பிடுவதை தெளிவுபடுத்துவதற்கான சுற்றறிக்கையை திறம்பட செயல்படுத்த மேலாண்மை தகவல் தரவு அறிக்கைகளை உருவாக்கி அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை முதன்மை செயலாளர் பிரஜேந்திர நவ்னிட், வணிகவரி ஆணையர் டி.ஜகந்நாதன் மற்றும் வணிகவரித் துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சின்னதம்பி பெரியதம்பி

சின்னதம்பி : ஏண்ணே; கடந்த ஜூன் 1 முதல் நிரப்பப் படாமல் இருந்துவரும் தேசிய மனித உரிமைகள் ஆணையத் தலைவர் பதவிக்கு, இந்திய உச்சநீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அவர்களின் பெயர் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறதாமே ?

பெரியதம்பி : **ஆமாம் தம்பி; கடந்த 'விநாயக சதுர்த்தி' முதலே உள்ளே இருந்த பூனைக்குட்டி இப்போது வெளியே வந்து கொண்டிருக்கிறது !**

பட்டூர் எஸ்.ஐபருல்லா தலைமை! துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

மாங்காடு நகர தி.மு.க. சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்! திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரை!

டி.ஆர்.பாலு எம்.பி - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு!

காஞ்சிபுரம், டிச. 22 - காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், மாங்காடு நகர தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக் கூட்டம் நாளை (23.12.2024-திங்கட்கிழமை) மாலை 6.00 மணி, எஸ்.எஸ்.கோயில் தெரு, மாங்காட்டில் நடைபெறுகிறது.

மாங்காடு நகர கழகச் செயலாளர், நகர மன்ற துணைத் தலைவர் பட்டூர் எஸ்.ஐபருல்லா தலைமை வகிக்கிறார். எம்.ஆர்.சீனிவாசன், ஜி.ராமு, ஆர்.சாரதி எம்.சி, ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

எம்.எஸ்.மகேந்திரன், ஜி.எம்.வில்லியம்ஸ் எம்.சி, சுசீலா இராதாகிருஷ்ணன், கே.ஜி.சங்கர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், தமிழ்நாடு அரசு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, குறு சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ. அன்பரசன், கழகப் பொருளாளர், நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் நகர செயலாளர், நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி, திருப்பெரும்புதூர் தொகுதி பார்வையாளர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் இளம் பேச்சாளர் ஜெ.கோகுல், ஆர்.பாஸ்கரன் எம்.சி, ஏ.கே.அப்துல்ரஹ்மான், எம்.ஆர்.வெங்கடேசன் எம்.சி, எம்.எஸ்.கதிரவன், டி.பெருமாள்ராஜ் எம்.சி, சரளாவிஜயகுமார் எம்.சி, மருத்துவர் க.ராஜேஷ், ஜி.ஞானவேல், மா.அ.தம்பிதுரை, எஸ்.எஸ்.எஸ்.யூ. செல்வராஜ், யூ.நளினி, மாங்காடு நகர மன்ற உறுப்பினர்கள் சாந்திசம்பத் எம்.சி, ராம்பியாரி லட்சுமணன் எம்.சி, சரிதா ஞானவேல் எம்.சி, க.மு.இஸ்மாயில் எம்.சி, இ.தனசேகர் எம்.சி, மேனகா கணபதி எம்.சி, சரஸ்வதி சீனிவாசன் எம்.சி,

அனுசுயா சத்தியசீலன் எம்.சி, மோசினா அபிபுர் ரஹ்மான் எம்.சி, யாஸ்மின் ஜபருல்லா எம்.சி, மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எம்.வல்லரசு, எஸ்.அக்ரம் ஆகியோர் நன்றி உரை ஆற்றுகின்றனர்.

மாலை 6.00 மணியளவில், கலைமாமணி இசையரசு டாக்டர் இறையன்பன் குத்தூஸ் வழங்கும் கழக இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பெரம்பலூர் தொகுதியில்

பிரத்யேக ரயில்வே வழித்தடம் அமைக்க வேண்டும்!

நாடாளுமன்ற மக்களவையில் - அருண்நேரு வலியுறுத்தல்!

திருச்சி டிச.22- பெரம்பலூர் தொகுதியில் பிரத்யேக ரயில்வே வழித்தடம் அமைக்க வேண்டும் என்று பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண்நேரு வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தொடர் தொடங்கி நடந்து வருகிறது. அப்போது கேள்வி நேரம் முடிந்ததும் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளை அவையின் கவனத்திற்கு கொண்டு வரும் நேரத்தில் அருண் நேரு எம்.பி பேசியதாவது:-

தமிழ்நாட்டில் எனது தொகுதியான பெரம்பலூர் வழியாக ரயில் பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து இந்த அவையின் கவன த்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இந்த ரயில் பாதையின் தேவை குறித்து பல முறை எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இத்தொகுதியானது தமிழ்நாட்டில் ரயில்வே மண்டலம் அல்லாத ஒரு பகுதியாகும்.

தமிழ்நாட்டில் உள்ள இதர அனைத்து பிராந்தியங்கள் ஒவ்வொன்றும் 40 கிலோமீட்டர் சுற்றளவில் ரயில் பாதையை கொண்டுள்ளன.

ஆனால், பெரம்பலூர் தொகுதியில் தோராயமாக 160 கிலோமீட்டர் சுற்றளவில் ரயில் பாதை இணைப்பு இல்லை. இது அமைக்கப்பட்டால் இரண்டு வழிகளில் தேசத்தின் வளர்ச்சிக்கு உதவும். அதாவது, பெரம்பலூர் மாவட்டத்தில் மிகப்பெரிய தோல் அல்லாத காலணி தொழிற்சாலை எரையூரில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த தொழிற்சாலையில் 50 ஆயிரம் பேர் பணிய மர்த்தப்பட உள்ளனர். இரண்டாவதாக, நாட்டில் மிகப் பெரிய அளவிலான மக்காச்சோளம் உற்பத்தி பெரம்பலூர் முதல் நாமக்கல் வரையிலான பகுதியில் நடைபெறுகிறது. இது சுமார் ஐந்து லட்சம் மெட்ரிக் டன் ஆகும். இவற்றை இணைக்கும் வகையில் ரயில்வே வழித்தடம் அமைக்கப்பட்டால் மக்கள் தொழிற்சாலைக்குச் வந்து செல்லவும், விவசாய உற்பத்தியை மேம்படுத்தவும் எளிதாக இருக்கும். அதன்மூலம், தேசிய வளர்ச்சிக்கான பங்களிப்பை அதிகரிக்கவும் உதவும். ஆகவே, பெரம்பலூர் தொகுதியில் பிரத்யேக ரயில்வே வழித்தடம் அமைக்க ரயில்வே அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் .

இவ்வாறு அவர் பேசினார்.

வே.மதியழகன் முன்னிலை! த.ரமேஷ், ஆர்.விஜய் தலைமை! செல்வி ரமேஷ் எம்.சி., டாக்டர் ஏ.அருணா, டாக்டர் வி.லஷ்மி பங்கேற்பு!

மதுரவாயல் 149வது வட்டத்தில் பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் - 1000 பேருக்கு அறுசுவை உணவு!

டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர் மா.சுப்பிரமணியன், காரம்பாக்கம் க.கணபதி - ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா துவக்கி வைக்கின்றனர்!

சென்னை, டிச.22- சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதி 149வது வட்ட திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாளை முன்னிட்டு பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் இன்று (22.12.2024 ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணிக்கு பெரியார் பூங்கா, இராதாகிருஷ்ணன் சாலை, பாத்திமா நகரில் நடைபெறுகிறது. மேலும் 1000 பேருக்கு அசைவ அறுசுவை உணவு வழங்கும் விழா 143, ராதா அவென்யூ, வளசரவாக்கத்தில் நடைபெறுகிறது.

இவ்விழா வே.மதியழகன் முன்னிலையில், 149வது வட்டக் கழகச் செயலாளர் த.ரமேஷ், பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஆர். விஜய், 149வது வார்டு மாமன்ற உறுப்பினர், பொது சுகாதார நிலைக்குழு உறுப்பினர் செல்விரமேஷ் எம்.சி., A4 மருத்துவ மனை உரிமையாளர் டாக்டர் அருணா, டாக்டர் வி. லஷ்மி ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் தெற்கு பகுதிச் செயலாளர், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் விழாவினை துவக்கி வைக்கின்றனர்.

இதில் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.சுரேஷ் பாபு, தி.நா.கமலநாதன், எம்.குமார், திருமதி.குப்பு ராஜேந்திரன், பி.எஸ்.துரைசாமி, எம்.முரளி, எஸ்.ஆறுமுகம், கே.ஜெகதீசன், கே.முத்துராமன், எஸ்.அமுல் ராஜ், ஆர்.சிவலிங்கம், கே.சரவணன், எம்.ஏ.வி. சீனிவாசன், எம்.ஏ.வீரராகவன், கே.ஜி.ஜெயவேல், எம்.கே.தணிகாசலம்,

எஸ்.ரவி,சி.பாலமுருகன், பி.சேகர், டாக்டர் எம்.கலாநிதி, ஆர்.சந்திர குமார், ஜி.கிருஷ்ணமூர்த்தி, ஏ.கணேசன், ஆர்.எம்.பழனி யப்பன், கே.ஆனந்த் கார்த்திக், புலவர் கருப்பையா, என்.ராஜா, எஸ்.கார்த்திக், என்.கிருஷ்ணன். இ.பவானி, ஆர்.வினோத், எஸ்.பரத், எஸ்.பி.புஷ்பராஜ், த.மோகன்ராஜ், த.சித்ராதங்கராஜ், எஸ்.சுந்தர் ராஜன், வி.ராஜேந்திரன், எஸ்.சுரேஷ்மோசஸ், எம்.அமுல் ராஜ், த.மோகனவேல், வி.டி.அரசு, பி.பொன்முத்து ரமேஷ், சி.சிவராமகிருஷ்ணன், வி.ஹேமந்த்குமார், எஸ்.குகாகார்த்திக், கே.பிரதாபன், எம்.சின்னா, என்.ராஜா, ஜே.அமுல்'ராஜ், எஸ். சத்யநாராயணன், ஆர்.விஸ்வநாதன், என்.உடையப்பன், என்.முருகேசன், பி.கிருஷ்ணன், பி.ராமஜெயம், ஜி.இ.சரவணன், வி.கார்த்திக் சத்தியநாராயணன், ஆர்.ஹரி, பி.செல்வகுமாரி, சுஜாதாநரசிம்மன், என்.கீதா, கிருஷ்டி, ஜெயந்தி, ஆர்.யாமினி மற்றும் கழகத்தின் மாவட்ட, பகுதி, வட்டத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், மகளிரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொள்ளுமாறு 149வது வட்டக் கழக செயலாளர் த.ரமேஷ் கேட்டுக் கொள்கிறார்.

பொங்கல் பண்டிகை நாளில் - யு.ஜி.சி. நெட் தேர்வுகள் நடத்துவது

உளவியல் ரீதியாக தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்!

"தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, டிச. 22- பொங்கல் பண்டிகை நாளில் யு.ஜி.சி. நெட் தேர்வுகள் நடத்துவதென்பது உளவியல் ரீதியாக தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் என "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

தேசிய தகுதித் தேர்வு அல்லது யுஜிசி நெட் என்று அழைக்கப்படும் தேர்வினை பல்கலைக் கழக மானியக்குழுவிற்காக தேசிய தேர்வு முகமை நடத்தி வருகின்றது. தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்வுகளை நடத்தும் யுஜிசி அமைப்பானது ஆண்டுக்கு இரண்டு முறை அதாவது ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் தேர்வுகளை நடத்துகிறது.

அட்டவணைப்படி டிசம்பர் மாதம் நடத்த வேண்டிய தேர்வுகளை தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை நாட்களில் நடைபெறும் என்று ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. பொங்கல் பண்டிகையை குறிவைத்து தேர்வு தேதிகளை அறிவிப்பது என்பது தேசிய தேர்வு முகமைக்கு ஒன்றும் புதிதல்ல. பட்டய கணக்காளர் தேர்வையும் பொங்கல் பண்டிகை நாட்களில் அறிவித்தது.

அதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதையடுத்து வேறுவழியின்றி கடந்த மாதம் மாற்றியது. தற்போது அதே பொங்கல் பண்டிகையை குறிவைத்துதான் யுஜிசி நெட் தேர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஒன்றிய அரசின் தேர்வு முகமைகள் எப்போதுமே பொங்கலை குறி வைப்பது ஏன் என்று சு.வெங்கடேசன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். ஒன்றிய அரசின் கீழ் உள்ள தேர்வு முகமைகள் அறிவிக்கிற பல தேர்வுகள் பொங்கல் விடுமுறை நாட்களில் அறிவிக்கப்படுவது தொடர்கதை ஆகிவிட்டதாகவும் கடுமையாக சாடி உள்ளார்.

தினகரன்

டிசம்பர் 21, 2024 சனிக்கிழமை

உளவியல் தாக்குதல்

தேசிய தகுதித் தேர்வு அல்லது யுஜிசி நெட் என்று அழைக்கப்படும் தேர்வினை பல்கலைக்கழக மானியக்குழுவிற்காக தேசிய தேர்வு முகமை நடத்தி வருகின்றது. தேசிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்வுகளை நடத்தும் யுஜிசி அமைப்பானது ஆண்டுக்கு இரண்டு முறை அதாவது ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் தேர்வுகளை நடத்துகிறது.

அட்டவணைப்படி டிசம்பர் மாதம் நடத்த வேண்டிய தேர்வுகளை தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை நாட்களில் நடைபெறும் என்று ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. பொங்கல் பண்டிகையை குறிவைத்து தேர்வு தேதிகளை அறிவிப்பது என்பது தேசிய தேர்வு முகமைக்கு ஒன்றும் புதிதல்ல. பட்டய கணக்காளர் தேர்வையும் பொங்கல் பண்டிகை நாட்களில் அறிவித்தது.

அதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதையடுத்து வேறுவழியின்றி கடந்த மாதம் மாற்றியது. தற்போது அதே பொங்கல் பண்டிகையை குறிவைத்

உலகின் மிகவும் தொன்மையான மொழி தமிழ் என்றும், தமிழர்களின் துடிப்பான பண்பாடு உலக அளவில் புகழ் பெற்றது என்றும் அவ்வப்போது மேடைகளில் பெருமை பேசும் பிரதமர் மோடி, தனக்கு கீழ் உள்ள யுஜிசி அமைப்பானது இதுபோன்று அடிக்கடி பொங்கல் திருநாளில் தேர்வுகள் நடத்துவதை கண்டிப்பதும் இல்லை. கண்டுகொள்வதும் இல்லை. ஒவ்வொரு முறையும் போராடித்தான் தேர்வு தேதிகளை மாற்றம் செய்ய வேண்டிய நிலை தமிழர்களுக்கு இருந்து வருகிறது.

நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்கக்கோரி பல முறை கோரிக்கை வைத்தும் ஏற்றுக்கொள்ளாமல் குறிப்பாக தமிழ்நாட்டு கிராமப் புற மாணவர்களின் எதிர்கால மருத்துவர் கனவை சிதைத்து வரும் ஒன்றிய அரசானது தற்போது பொங்கல் பண்டிகை நாளில் யுஜிசி நெட் தேர்வுகள் நடத்துவது என்பது உளவியல் ரீதியாக தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலே.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட்டச் செயலாளர் ஜி.பி.எஸ்.பாலசதீஷ் தலைமையில் துணை முதல்வர் பிறந்த நாள் விழா!

வேளச்சேரி 177 (அ) வட்ட தி.மு.க. சார்பில் தெருமுனைக் கூட்டம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

தமிழச்சி தங்கபாண்டியன் - ஜெ.எம்.எச்.அசன் மௌலானா பங்கேற்பு! அரிமா சு.சேகர் - பெ.மணிமாறன் முன்னிலை!

சென்னை, டிச. 22 சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்குப் பகுதி, 177 (அ) வட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தெருமுனைக் கூட்டம் இன்று (22.12.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு, வேளச்சேரி, டான்சி நகர், 2 வது தெரு, ராயல் சூப்பர் மார்க்கெட் அருகில் நடைபெறுகிறது.

177 (அ) வட்டக் கழகச் செயலாளர் ஜி.பி.எஸ்.பாலசதீஷ் தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர் அரிமா சு.சேகர், 177 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பெ.மணிமாறன், 178 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி எஸ். பாஸ்கரன், 176 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தம், 175 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மு.மகேஸ்வரி முருகவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.ஏ.சங்கர், வி.பார்த்தசாரதி, சி.முருகன், ஜி.நடராஜன், அ.நீலகண்டன், கோ.சிவக்குமார், இரா.ஏழுமலை, பி.சேச்சம்மாள், நா.கண்ணன், கோ.ஸ்ரீனி வாசன், சி.பத்தா, பா.ஸ்ரீனிவாசன், வே.கருணைஅழகன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமை கழகப் பேச்சாளர் கு.வெங்கட்ராமன், கழக இளம் பேச்சாளர் த.கங்கா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எம்.எச்.அசன் மௌலானா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகிகள் பா.சாய் ஜெயகாந்தன், இரா.துரைராஜ், எஸ்.குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மனோகரன், வாசுகி பாண்டியன், கழக த.ரமேஷ், த.ஜெகதீசன், எச்.வெங்கடேசன், ஆர்.பாலசுந்தரம், ஜி.வரதன், எம்.விநாயகமூர்த்தி, பகுதிக் கழக நிர்வாகிகள் சி.பழனி, பொ.த.எழில்வாணன், ந.டில்லிகுமார், சே.மைதிலி,

வேளச்சேரி மேற்குப் பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள் பொ.த.மதிவாணன், த.பார்த்திபன், எஸ்.முருகவேல், தே.கோபி, க.பாரதிதாசன், கே.என்.தாமோதரன், வி.சக்திவேல், மாவட்டப் பிரதிநிதிகள் வி.ஜி.மோகன், சி.சூர்யா மணிவண்ணன், க.பாலாஜி, ஜெ.பவளவண்ணன், ஆ.வடிவேலன், ஏ.வி.ரங்கா, ஜெ.சீத்தாபதி, கே.ஆர்.பி.பாண்டியன், என்.நேசன், வி.கோபாலகிருஷ்ணன், ஆர்.நாகராஜ் மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் பலர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

வட்டப் பொருளாளர் இரா.ஏழுமலை, பகுதிப் பிரதிநிதி நா.கண்ணன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (21.12.2024) சென்னை, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் சாலையோர உணவு வணிகர்களுக்கான விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர் லால்வேனா, கூடுதல் ஆணையர் மரு.தேவபார்த்தசாரதி, ஒன்றிய அரசு இணை இயக்குநர் (பயிற்சி) அன்கேஷ்வர் மிஸ்ரா, தென்மண்டல இயக்குநர் .வி.கே.பஞ்சம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளும் கட்சி தலைவர் .ந.இராமலிங்கம், நகர நல அலுவலர் மரு.ஜெகதீசன், சென்னை மாவட்ட நியமன அலுவலர் மரு.சதிஷ்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1)ன் கீழ்)

2024- ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு, மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேயர்

செ.ம.தொ.இ / 1265 / வரைகலை / 2024